[1982 செப்டம்பர் 8

டேராப்பாறை அணைக்கட்டுத் திட்டம்

வினா எண் 35.—திரு இரா. முத்தையா: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டத்தில் டேராப்பாறை அணைக்கட்டுத் திட்டம் பரிசீலனையில் உள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடை ஏற்கனவே 4 மாதங்களுக்கு முன்பு ஒப்புதல் அளிக்கப்பட்ட விடை. புதிய நிலைமைகள் இருக்கிற காரணத்தாலே ஒரு திருத்திய விடையை அளிப்பதற்கு நான் விரும்புகிறேன். அதற்குத் தங்களுடைய அனுமதியைப் பெற்று நான் இந்த விடையை அளிக்க விரும்புகிறேன்.

இத் திட்டத்திற்காக அறிக்கை ஒன்றை தலைமைப் பொறியாளர் அவர்கள் அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அரசு அதைப் பரிசீலனை செய்து அதை எடுத்துக்கொள்ளலாம் என்று சமீபத்திலே ஆணையிட்டிருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதே பகுதியிலே கட்டளைக்கோம்பை என்ற அணைக்கட்டு திட்டம் அந்தப் பகுதி மக்களுடைய, விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் அடையக்கூடிய இந்தத் திட்டத்தை அரசு விரைவாகச் செயல்படுத்துவதற்கு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகாவிலே சாத்தூர் பகுதியிலே இருக்கக்கூடிய வட்டாறு ஆற்றில் இருக்கக்கூடிய பல உபநதிகளின் குறுக்கே அமைப்பதாக ஏற்கனவே முடிவு செய்து நாம் அந்த வேலைகளைத் துவக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக்கூடிய அந்த கட்டளைக்கோம்பை திட்டமும் நீண்டநாட்களாக இருந்து வருகிற கோரிக்கைதான். அதை உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டேராப்பாறை அணைக்கட்டுத் திட்டத்திலே ஏறத்தாழ 1,065 ஏக்கருக்கு மேல் புதிய விளை நிலங்கள் இந்தப் பாசனத் திட்டத்தின் கீழ் வருவதாக அறிகிறேன். அப்படிக் கொண்டுவருகிறபோது ஏற்கனவே அந்த வட்டாறுகளின் மூலமாகப் பாய்ந்துகொண்டிருக்கின்ற அங்கப் பகுதியிலே

உள்ள நிலங்களா அல்லது வேறு நிலங்களா? அப்படி வேறு நிலங்கள் என்றால், ஏற்கனவே தண்ணீர் பாய்ச்சப்படுகின்ற, இந்த ஆறுகளில் இருந்து பயன்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலங்களுக்குப் போதுமான அளவு தண்ணீர் இருக்கும் என்று அரசு கருதுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பயன்பெற்றுவரும் நிலங்களுடைய அளவு 732.55 ஏக்கர். இவைகளுக்கு முதலிலே பாசன உறுதியை அளித்ததற்குப் பிறகுதான், கிட்டத்தட்ட 10.75 ஏக்கர் புதுய புஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறுவதற்காக இந்தத் திட்டத்தை அரசு எடுத்திருக்கிறது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே பேராப்பாறை அணைக் கட்டுத்திட்டத்திற்குத் தலைமைப் பொறியாளருடைய அறிக்கை பெற்றுவிட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி என்று சொன்னால், இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு? இது எப்போது ஆரம்பித்து முடிக்கப்படும் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சமீபத்திலேகூட அதற்குக் கால்கோள்விழா நடத்தி விட்டு வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கூட அதிலே பங்கு பெற்றார்கள். ஏற்கனவே அது விரைவாக பணி துவக்கப்பட்டு இருக்கிறது. அதனுடைய மதிப்பீடு ரூ. 233 இலட்சம்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன், வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

சாத்தனூர் அணையிலிருந்து மேல்மட்டக் கால்வாய்
அமைக்கும் திட்டம்.

* வினா எண் 36—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சாத்தனூர் அணையில் இருந்து மேல் மட்டக் கால்வாய் வெட்டுவதற்கு ஆய்வுகள் செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்போது துவங்கப் படும்?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS